## தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.4 மற்றும் 1.6.5(அ) ஆம் பந்திகளில் குறிப்பிட்ட உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டின் போது என்னால் மேற்கொண்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீண்டுவரும் செலவுகளின் மொத்த தொகை ரூபா 5,759,000,739 ஆக இருந்தும், ஏசீஏ-2 படிவத்தில் மீண்டுவரும் செலவுகளின் கீழான மொத்த செலவுகள் ரூபா 5,756,359,923 ஆக காட்டப்பட்டிருந்ததனால் அப்படிவத்திற்குரிய செலவுகளின் மொத்த தொகை ரூபா 2,640,815 குறைத்தும் தேறிய விளைவுகள் (சேமிப்பு) அந்த அளவால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் முறையான படிவத்தில் சரியான செலவுகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 8,942,715,063 தொகையான நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி திறைசேரி ஏடுகளின் பிரகாரம் ரூபா 9,024,535,834 தொகையினால் ரூபா 81,820,771 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. மேலும் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு விபரமான துணைப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவுகளை உள்ளடக்கும் போது குறைபாடுகள் இன்றி சரியான பெறுமதியை உள்ளடக்கி சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்கி பேணுதல் வேண்டும். | நிதியற்ற சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரித்தல் தற்பொழுது இடம்பெற்று வருவதுடன் உரிய பதிவேட்டினைத் தயாரித்து முடிவடைந்த உடன் ஒரு பிரதியை கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவு செய்து தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 1.6.3 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 08 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் மொத்த தொகை ரூபா 118 மில்லியனாக இருந்ததுடன் இதில் இரண்டு ஆண்டுகளை மிகைத்த மூன்று வைப்புக் கணக்குகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சிறைக் கைதிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,228,197 ஆகும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது இந்நிலைமையினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவு செய்து தெரிவித்துக் கொள்கின்றேன். |

### 1.6.4 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **சேதங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அதன் கீழுள்ளவாறான படிவத்திற்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேட்டினை நாளதுவரையாக்கி பேணுதல் வேண்டும். | சேதங்கள் தொடர்பான பதிவேட்டினை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நாளதுவரையாக்கி பேணுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதியற்ற சொத்துக்களை உறுதிப்படுத்துவதற்காக சொத்துக்கள் பதிவேட்டினை பேணுதல் மற்றும் அவற்றினை நாளதுவரையாக்குதல் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை அறிவுறுத்தல் பின்பற்றப்படுதல் வேண்டும். | 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அனைத்து அலுவலக உபகரணங்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மதிப்பீடு செய்யப்படாத காணிகளையும் கட்டிடங்களையும் மதிப்பீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) நாடு முழுவதும் அமைந்துள்ள 30 சிறைச்சாலைகளில் தாபிக்கப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையான மற்றும் | அனைத்து சிறைச்சாலைகள் நிறுவனங்களுக்கும் நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைப் பேணுவதற்காக உரிய சிறைச்சாலைகள் நிறுவனங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | அதிகளவு பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பதிவேட்டினை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். | தெரியப்படுத்தப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக தொடர்ச்சியான கவனத்திற்கு உட்படுத்தப்படும் எனவும் தயவாக தெரியப்படுத்துகின்றேன். |
| (இ) | நிதியற்ற சொத்துக்களை அறிக்கையிடும் போது அச்சொத்துக்களின் பிரதான பேரேட்டு மீதிப் பெறுமதியானது தனித்தனி சொத்துக்கள் மீதியுடன் கணக்கிணக்கம் செய்யப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துவதற்காக ஏசீஏ-106 படிவம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் படுகின்ற பெறுமதிகளை இணக்கம் செய்யும் வகையில் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் படிவங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | திணைக்களத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்களில் குறிப்பிட்ட அளவானவை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய காணிகளையும் கட்டிடங்களையும் மதிப்பீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. நிதியற்ற சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரித்தல் தற்பொழுது இடம்பெறுவதுடன் COVID-19 தொற்றுநோய் காரணமாக அந்நடவடிக்கையை முடிவுறுத்துவதற்கு முடியாதுள்ளது. பதிவேட்டினைத் தயாரித்த உடன் ஒரு பிரதியை கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

### 1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | | |
| (i) 1877 இன் 16 ஆம் இலக்க சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் | i. நீர்கொழும்பு சிறைச்சாலையின் 16 ஆம் வாட்டின் 18,853 சதுர அடியினுள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வைத்திருக்கக் கூடிய கைதிகளின் எண்ணிக்கை 350 ஆகும். எனினும், 2019 ஆம் ஆண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது வைத்திருக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 1783, 1843, 1727, 1773, 1695 ஆகக் காணப்பட்டமை தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | இதற்கான தகவல்கள் நீர்கொழும்பு சிறைச்சாலை மூலம் கோரப்பட்டுள்ளதுடன் COVID-19 தொற்றுநோய் காரணமாக தகவல்களைப் பெறுதல் தாமதமடைந்துள்ளது. அத்தகவல்களைப் பெற்ற பின்னர் தேவையான தகவல்கள் வழங்கப்படுமென தெரிவிக்கின்றேன். |
| | ii. களுத்துறை சிறைச்சாலையில் 22 வாட்டுகளில் 17,126 சதுர அடியினுள் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வைத்திருக்கக் கூடிய கைதிகளின் எண்ணிக்கை 317 ஆக இருந்தும் 2019 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை 1,159, 1,294, 1,276, 1,415, 1,358 மற்றும் 1,411 ஆகக் காணப்பட்டது என்பது | சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | இதற்கான தகவல்கள் களுத்துறை சிறைச்சாலையிடம் கோரப்பட்டுள்ளதுடன் COVID-19 தொற்றுநோய் காரணமாக தகவல்களைப் பெற்றுக் கொள்வது தாமதமடைந்துள்ளது. அத்தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேவயான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | தகவல்களை வழங்குவதாகத் தெரிவிக்கின்றேன். |
| (ii) | சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 54 ஆம் பந்திக்கு 1956 ஆம் ஆண்டில் மேற்கொண்ட திருத்தங்களின் 178 ஆம் பந்தி | சிறைச்சாலையில் இடவசதிகள் உள்ளவகையில் ஒவ்வொரு வகையைச் சேர்ந்த கைதிகள் தனித்தனியாக சிறைச்சாலைகளில் வைத்திருக்க வேண்டிய போதிலும், நீர்கொழும்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற அதிக நெரிசல் காரணமாக அவ்வாறு வகைப்படுத்தி வைத்திருப்பதற்கு முடியாதிருந்தது. | சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | இதற்குரிய தகவல்கள் நீர்கொழும்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளிடம் இருந்து கோரப்பட்டுள்ளதுடன் COVID-19 தொற்றுநோய் காரணமாக தகவல்களைப் பெற்றுக் கொள்வது தாமதமடைந்துள்ளது. அத்தகவல்களைப் பெற்ற பின்னர் தேவையான தகவல்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கின்றேன். |
| (iii) | 107 ஆம் பந்தி | 2019 நவம்பர் 25 ஆந் திகதியில் உள்ளவாறு களுத்துறை சிறைச்சாலையில் சிறைக்கைதிகள் மற்றும் தடுப்புக் காவல் கைதிகளிடமிருந்து உத்தியோகத்தர்களிடமிருந்து உத்தியோகத்தர்களின் பொறுப்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 123,657 பணத்தை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய போதிலும், அப்பணத்தை இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் தனித்தனியாக பொதிகளில் இட்டு சிறைக்கைதிகள் / தடுப்புக் காவல் கைதிகளின் பெயர், பதிவு செய்தல் இலக்கங்களுடன் அடையாளமிடப்பட்டு சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பு பெட்டகத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதற்குரிய தகவல்களை களுத்துறை சிறைச்சாலையிடம் கோரப்பட்டுள்ளதுடன் COVI-19 தொற்றுநோய் காரணமாக தகவல்களைப் பெற்றுக்கொள்வது தாமதமடைந்துள்ளது. அத்தகவல்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தேவையான தகவல்களை வழங்குவதாகத் தெரிவிக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதி 109 | 17 சிறைச்சாலை நிறுவனங்களின் 437 ஒட்டுமொத்த உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் 1998 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை நிரந்தரமாக்குவதற்கு தகைமைகளைப் பெற்ற 251 உத்தியோகத்தர்களுக்கு முறையான கடிதம் வழங்கப்பட்டிருக்கவில்லை. 05 சிறைச்சாலைகளில் 2009 ஆம் ஆண்டிலிருந்து2017 ஆம் ஆண்டு வரை நியமனங்களைப் பெற்ற தகைமைகளைக் கொண்ட 53 உத்தியோகத்தர்களின் கோவைகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 11 சிறைச்சாலை நிறுவனங்களில் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை நியமனங்களைப் பெற்ற 34 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளை நாளதுவரையாக்கி சேவைகளில் நிரந்தரமாக்கி உரிய பயிற்சிகள் வழங்கப்படாதிருந்ததுடன் 11 சிறைச்சாலை நிறுவனங்களில் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை நியமனங்களைப் பெற்று இடமாற்றம் பெற்ற 37 உத்தியோகத்தர்களின் கோவைகளைத் தயாரித்து பதவியில் நிரந்தரமாக்குவதற்கு நியமன அதிகாரிக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிருவாக நடவடிக்கைகள் உரிய நடைமுறை களுடன் பேணப்பட வேண்டியதுடன் கோவைகளைப் பேணுவதும் சரியாகச் செய்யப்படுதல் வேண்டும். | இது சம்பந்தமான உரிய தகவல்களை கட்டுப்பாட்டுப் பிரிவுகளிடம் கோரப் பட்டுள்ளதுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் சம்பந்தமாக முறையான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் COVID-19 தொற்றுநோய் காரணமாக உரிய கலந்துரையாடல் தாமத மடைந்துள்ளதுடன் அதனை நடாத்திய உடன் தேவையான தகவல்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கின்றேன். |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை<br>------------------ | | | |
| (i) | 2.8.1(அ) பந்தி | யாராவது ஒரு அங்கத்தவர் பெறுகைக்குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஆகிய இரண்டு குழுக்களிலும் சேவையாற்றலாகாது என்றபோதிலும், களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர் | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | உரிய தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் COVID-19 தொற்றுநோய் காரணமாக உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கூறிய இரண்டு குழுக்களிலும் சேவையாற்றியிருந்தனர். | | தாமதமடைந்துள்ள துடன் தகவல்களைப் பெற்ற பின்னர் தேவையான தகவல்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். |
| (ii) | 2.14.1 ஆம் பந்தி | சந்தை விலைகளை ஒப்பீடு செய்யும் முறைமையின் கீழ் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சீல் இடப்பட்ட 05 விலை மனுக்களைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டும். | உரிய தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் COVID-19 தொற்றுநோய் காரணமாக உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது தாமதமடைந்ததனால் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தேவையான தகவல்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 108,500,000 தொகையான நிதிஏற்பாட்டில் ரூபா 99,907,654 தொகையான நிதிஏற்பாடானது குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளுக்காக செலவிடப்படாதிருந்ததுடன் அந்த எஞ்சியுள்ள சதவீதமானது 26 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | 232-01-01-05-2104 ஆம் இலக்க செலவு விடயத்திற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டதானது அருன கொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் நீர் வழங்கலைப் பெற்றுக் கொள்வதற்கும் அச்செயற்பாட்டை மேற்கொள்கின்ற நிறுவனமான நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மூலம் என்பதனால் அந்நிறுவனம் உரிய செயற்பாட்டின் |

| | | | |
|---|---|---|---|
| | | | நிர்ணயிக்கப்பட்ட பகுதியை நிறைவேற்றாததன் காரணமாக இந்நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 10% கட்டாயம் சேமிக்கப்பட வேண்டுமென்பதால் இச்சேமிப்பு இடம்பெற்றிருந்தது. 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை, 2019 செப்தெம்பர் 24 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் 2019 திசெம்பர் 04 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் செலவு செய்வதற்கு முடியாமை மற்றும் பெறுகை நடவடிக்கைகளை முடிவுறுத்த முடியாமையின் காரணமாக 2106 மற்றும் 2401 ஆம் இலக்க செலவு விடயங்களின் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன என சுட்டிக்காட்டுகின்றேன். |
| (ஆ) | 04 மூலதன செலவு விடயங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 370,000,000 தொகையான குறைநிரப்பு நிதிஏற்பாட்டிலிருந்தும் 05 மூலதன செலவு விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 06/69 இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா 43,000,000 தொகையான நிதிஏற்பாட்டிலிருந்தும் முறையே ரூபா 321,126,255 மற்றும் ரூபா 37,553,697 தொகைகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவு விடயங்களின் சேமிப்பு | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடைமுறைச் சாத்தியமான செலவு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | 232-1-1-3-2104 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் யாழ்ப்பாண சிறைச்சாலையை நிர்மாணிப்பதற்குரிய விலைப்பட்டியல் திணைக்களத்திற்குக் கிடைத்திருந்தும் தேவையான அளவு கட்டுநிதி கிடைக்காததன் காரணமாக செலவு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை.<br><br>232-1-1-2104 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் கட்டிட நிர்மாணத்தின் கீழ் கைதிகளுக்கு மலசலகூட வசதிகளை |

சதவீதம் 27 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

நிர்மாணிப்பதற்காக 2019 திசெம்பர் 27 ஆந் திகதி குறைநிரப்பு நிதிஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அதற்குத் தேவையான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காலம் இல்லாததன் காரணமாக சேமிப்பு இடம்பெற்றுள்ளது.

232-1-1-2509 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் ரூபா 250 மில்லியன் மற்றும் ரூபா 50 மில்லியன் நிதிஏற்பாடு பாதீட்டு, பிரேரணையின் கீழ் 2019 ஏப்ரல் 25 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை, 2019 செப்தெம்பர் 24 ஆந் தகிதிய 05/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை 2019 திசெம்பர் 04 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமையின் காரணமாக முறைப்படியாக உரிய இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது. எனவே குறைநிரப்பு நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது என அறவிக்கின்றேன்.

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று திறைசேரியினால் வழங்கப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 257,799,701 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி திறைசேரி ஏடுகளின் பிரகாரம் ரூபா 435,234,914 ஆக இருந்ததனால் ரூபா 177,435,213 | திணைக்களத்தின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக் களானவை திறைசேரியினால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் ஒப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | 29 சிறைச்சாலை நிறுவனங்களின் மூலம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சிகாஸ் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அக்கடப்பாடுகள் கைவிடப்பட்டு பொறுப்புக்கள் மாத்திரம் குறிப்புக்கள் இலக்கம் (iii) மற்றும் (iv) இன் மூலம் காட்டுதலானது இந்நிலைமைக்கு காரணம் என அவதானிக்கப்பட்டது. சிகாஸ் முறைமையின் மூலம் அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களும் உரிய கடப்பாடுகள் பொறுப்புக்களை தலைமை அலுவலகத்தில் பார்த்துக் கொள்ளக்கூடிய வசதிகள் வழங்கப்படாமையின் காரணமாக நிறுவனங்கள் பற்றிய சரியான தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் புலனாய்வு செய்யும் இயலுமை இருக்கவில்லை. இச்சிக்கல் தொடர்பாக திறைசேரியின் கணக்குகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியிருந்தும் இது வரை உரிய வசதிகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க ரூபா 494,406,145 ஆக இருந்த போதிலும், திணைக்கள ஏடுகளின் | திணைக்களத்தின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக் களானவை வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் ஒப்பீடு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் ரூபா 507,497,477 ஆக இருந்ததனால் ரூபா 13,091,032 வித்தியாசம் காணப்பட்டது. | செய்யப்படுதல் வேண்டும். | |
| (இ) | நிதிப்பிரமாணம் 94(1) இலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணாக 04 செலவு விடயங்களில் ரூபா 5,951,798 தொகையான சேமிப்புக்களை மிகைத்து ரூபா 13,223,721 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது. | நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யப்படாதிருத்தல் வேண்டும். | 1302 மற்றும் 1402 செலவு விடயங்கள் தொடர்பான உங்களின் அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் அச்செலவு விடயங்களின் மூலம் 2018 திசெம்பர் மாதத்தின் செலவுகள் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டது. இவ்வாறு எஞ்சியுள்ள விலைப்பட்டியல்களில் பல 2019 திசெம்பர் மாதத்திற்குரிய விலைப்பட்டியல்கள் என தயவாகத் தெரிவிக்கின்றேன். மேலும், 2002 செலவு விடயத்தின் மூலம் அத்தியாவசியமான பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இப்பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருந்ததுடன் அதற்காக 2020 ஆம் ஆண்டில் நிதிஏற்பாடு காணப்பட்டது என தெரிவிக்கின்றேன். அவ்வாறே, 2102 விடயத்திலிருந்து கைதிகளுக்கான மாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 6,463,800 தொகையான செலவுகளுக்கு கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தும் உரிய நிறுவனம் வழங்குதல் 2020 வரை தாமதித்தமையின் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்குள் செலவு செய்வதற்கு முடியாதிருந்தது. அந்த ரூபா 6,463,800 தொகையான செலவுகளுக்காக 2020 ஆம் |

| | | |
|---|---|---|
| | | ஆண்டிற்கான மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

**2.3 வங்கி கணக்கு செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 வங்கிக் கணக்குகளில் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களை மிகைத்த வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 81,835 கூட்டுமொத்தமான காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தில் உள்ள ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | இந்நிலைமையை சரி செய்வதற்கும் நி.பி 396(ஈ) இன் பிரகாரம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஆலோசனை வழங்கியுள்ளேன். எதிர்காலத்தில் முறையாக வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் எனவும் தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். |

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதி தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்களுக்குள் உரிய கடன் மீதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், இடமாற்றம் பெற்றுச் சென்ற 41 | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் முறைப்படியாக பின்பற்றப்படுதல் வேண்டும். | கருத்துக்கள் தரப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 660,727 கடன் மீதி காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 91,209 பணம் 04 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதியாகும். | | |
| (ஆ) | சேவையை கைவிட்டுச் சென்ற 166 உத்தியோகத்தர் களிடமிருந்தும் வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட 48 உத்தியோகத்தர் களிடமிருந்தும் அறவிட வேண்டிய ரூபா 5.65 மில்லியன் தொகையும் ஓய்வுபெற்ற மற்றும் மரணமடைந்த 114 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4.2 மில்லியன் தொகையும் வதுபிடிவல சிறைச்சாலையை மூடியதன் பின்னர் அதிலிருந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 168,183 மீதியும் அறவிடப்படாதிருந்ததுடன் இக்கடன் மீதியில் 05 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 4.79 மில்லியனாக இருந்தது. | நிலுவையாகவிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை விரைவாகச் செய்யப்படுதல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 சிறைச்சாலை நிறுவனங்களில் இனங்காண முடியாத 01 ஆண்டினை மிகைத்த ரூபா 401,153 தொகையினை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

## 2.5 முற்பணங்கள் வழங்கலும் தீர்த்து வைத்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சிறைச்சாலைகளின் பல்வேறு செயற்பாடுகளுக்காக வணிக முற்பணங்கள் கணக்கிலிருந்து 13 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 164,480 முற்பணங்களில் எஞ்சியுள்ள ரூபா 33,580 பணம் நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும், 03 நாட்களிலிருந்து 72 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. 06 உத்தியோகத்தர்களுக்கு 14 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 131,525 தொகையான உப கட்டுநிதியைத் தீர்த்து வைப்பதற்கு முன்னர் மேலும் ரூபா 139,075 தொகையான உப கட்டுநிதி வழங்குதலும் இடம்பெற்றிருந்தது. | நிதிப் பிரமாணம் மற்றும் உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருப்பதனைக் கவனித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கும் பிரிவுத் தலைவர்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தொடர்ச்சியான பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றது எனவும் தெரிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி ஆரம்பித்து ரூபா 101 மில்லியனுக்கு அண்மித்த செலவினை மேற்கொண்டுள்ள சிறைச்சாலைகள் முகாமைத்துவ முறைமையினை அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களிலும் அமுல்படுத்துவதற்கு | தகவல் முறைமையினை விரைவாக அனைத்து நிறுவனங்களிலும் அமுல்படுத்தி எதிர்பார்த்த விளைவுகளை | நிதிஏற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களையும் ஒரே தடவையில் வலையமைப்பிற்கு உட்படுத்த |

| | | |
|---|---|---|
| முடியாதிருந்தது. | அடைந்து கொள்ளுதல் வேண்டும். | முடியாதிருந்ததுடன் நிதி ஏற்பாடு கிடைக்குமாயிருந்தால் மிகுதியான 16 சிறைச்சாலை நிறுவனங்களை எதிர்காலத்தில் வலையமைப்பிற்கு உட்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 மார்ச் மாதம் அவதானிக்கப்பட்டவாறு மொத்த பரப்பளவு 2.6103 ஹெக்டயர்களான நீர்கொழும்பு சிறைச்சாலை அமைந்துள்ள காணி, அத்தியட்சகர் உத்தியோக பூர்வ இல்லம் அமைந்துள்ள காணி, சிலாபம் சிறைக்கூடம் அமைந்துள்ள காணி ஆகிய சொத்துக்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களைப் பொறுப்பேற்றலை முறையாக மேற்கொண்டு அவை ஏடுகளில் பதியப்பட வேண்டியதுடன் அரசாங்க ஆதனங்களின் உரிமையும் பாதுகாப்பும் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) 03 ஆண்டுகள் உத்தரவாத காலத்துடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,353,085 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட வைரஸ் காப்புடனான 14 கணனிகளும் ஒரு அச்சு இயந்திரத்தையும் உள்ளடக்கிய ஏனைய துணைக் கருவிகள் 2017 மார்ச் 23 ஆந் திகதி நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு கிடைத்திருந்தும் உத்தரவாத காலத்தை | சொத்துக்கள் விளைவற்று இருப்பதற்கு இடமளிக்காது அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மிகைத்துள்ள இக்கணினி எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | களுத்துறை சிறைச்சாலைக்கு 2016 பெப்ரவரி 18 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த பார்சல்களைப் பரீட்சிக்கும் ஸ்கேனர் உபகரணத்தைப் பொருத்துதலானது ஏற்கனவே திட்டமிடப்படாது இடம்பெற்றதன் காரணமாக ஸ்தாபித்தலானது ஒரு ஆண்டின் பின்னர் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி இடம்பெற்றிருந்தது. இந்த உபகரணத்தை செயற்படுத்துதல் சம்பந்தமாக பயிற்சிகள் பெற்ற உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதன் காரணமாக 2019 நவம்பர் 29 ஆந் திகதி வரையும் இயந்திரம் செயற்படுத்தப் படாதிருந்ததுடன் உரிய கட்டிடம் மூடப்பட்டிருந்தது என்பது பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | பௌதீக வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் இந்த இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு பொருத்தமான மற்றும் போதியளவு பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டு இயந்திரங்கள் விளைவற்று வைத்திருக்கப்படாது எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்று வதற்காக விரைவாக கலந்துரையாடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | களுத்துறை சிறைச்சாலைக்குச் சொந்தமான சிரிலந்த வத்த மற்றும் குருந்துவத்த 4.7148 ஹெக்டயர் காணி, 0.0329 ஹெக்டயர் பானந்துறை சிறைக்கூட காணி, 0.07771 ஹெக்டயர் பாணந்துறை உத்தியோகபூர்வ இல்லம், களுத்துறை சிறைக்கூட வளவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வதிவிடம் என்பன சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தும் உரிமை சம்பந்தமான காணி | நிறுவனத்தின் சொத்துக்களைப் பொறுப்பேற்று சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன் இக்காணியின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தேவையான ஆவணங்களைப் பெற்று கோவை செய்து கொள்வதற்கும் சொத்துக்களின் | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| உறுதி, ஒப்படைப்பு சான்றிதழ் முதலிய உரிமை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை. | பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) சிறைச்சாலை தகவல் முகாமைத்துவ முறைமையை நீர்கொழும்பு சிறைச்சாலையினுள் விரைவாக அமுல்படுத்துமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் 2019 மார்ச் 14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கிய ஆலோசனையை அமுல்படுத்தாமையினால் நாளாந்தம் சிறைச்சாலையில் சிறைப்படுத்தப்படும் கைதிகளின் தகவல்களை அதே தினத்தில் முறைமையில் உள்ளடக்கப்படாமை தற்பொழுது சிறை வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளின் தகவல்கள் முறைமைக்குள் உள்ளடக்கப்படாமை மற்றும் சிறைப்படுத்தலை பதிவு செய்தல் பிரிவில் தகவல் முறைமையை அமுல்படுத்தி எதிர்காலத்தில் ஏனைய பிரிவுகளிலும் விரிவுபடுத்துதல் ஆகிய விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | அத்தியாவசிய அம்சமாகிய தகவல் முகாமைத்துவ முறைமையை உரிய முறையில் தயாரித்து அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறைச்சாலைகள் ஒழுக்காற்று பிரிவின் மூலம் நீர்கொழும்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகள் வளவில் சோதனை செய்த போது நடமாடும் தொலைபேசிகளும் அதன் துணைக் கருவிகளும் போதைப் பொருட்களும் புகையிலையும், வயர்கள் மற்றும் ஏனைய சட்டவிரோத பொருட்களும் கைப்பற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக தடை செய்யப்பட்ட பொருட்களை சிறைச்சாலைக்குள் கொண்டு வருவதனை தடைசெய்யும் நடைமுறையில் பலவீனம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தடை செய்யப்பட்ட பொருட்களை சிறைச்சாலைக்குள் எடுத்து வருவதனை தடை செய்வதற்காக முடியுமான அனைத்து வகையிலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | 2017 பெப்ரவரி 27 ஆந் திகதி களுத்துறை சிறைச்சாலையிலிருந்து கடுவல நீதவான் நீதிமன்றம் வரை எடுத்துச் செல்லப்பட்ட விசேட பாதுகாப்பிற்கு குறித்வைத்து மேற்கொள்ளப்பட்ட வெடித் தாக்குதல் சம்பந்தமாக பொறுப்புவாய்ந்த நபர்களினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் மூலம் முறையான ஒரு விசாரணை இடம்பெற்றிருக்கவில்லை. வெளி எதிரிகள் இருக்கின்ற சிறை / தடுப்புக் காவல் கைதிகளை தடுத்து வைத்தல் சம்பந்தமாகவும் சிறைத் தடுப்புக் காவல் கைதிகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லும் போது உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு மற்றும் அந்த சிறை / தடுப்புக் காவல் கைதிகளின் பாதுகாப்பு | உரிய தரப்பினர்களால் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் இச்சம்பவம் சம்பந்தப்பட்ட பின் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம்பெறுவதனைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் திருப்தியான மட்டத்தில் இருக்கவில்லை. | | |

**4. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் வெற்றிடம் 2,202 ஆகக் காணப்பட்டது. அதற்கு மத்தியில் மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் பதவி, 03 சிறைச்சாலை ஆணையார் பதவிகள், 03 கணக்காளர் பதவிகள், விசேட தரத்திலுள்ள 06 அத்தியட்சகர் பதவிகள், என்பவற்றை உள்ளடக்கிய 36 அத்தியட்சகர்கள் பதவிகள், 21 வைத்திய உத்தியோகத்தர் பதவிகள், 08 உதவி வைத்திய உத்தியோகத்தர் பதவிகள் பெண் மற்றும் ஆண் வகுப்பு I மற்றும் வகுப்பு II இன் 165 ஜெயிலர் பதவிகள், 36 புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள் பதவிகள், 1554 சேர்ஜன் மற்றும் காவலாளர் பதவிகள், 37 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 22 அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 48 தொழில்சார் ஆலோசக உத்தியோகத்தர் பதவிகள், 39 விவசாய ஆலோசகர் மற்றும் விவசாய ஒவசியர் பதவிகள், 24 மருந்து கலவையாளர் பதவிகள், 38 தாதி உத்தியோகத்தர் பதவிகள், 29 சாரதி பதவிகள் என்பன வெற்றிடங்களாக காணப்பட்டதுடன், இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நிறுவனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உயர் முகாமைத்து வத்தினால் உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | டீ25/நானா/2016 ஆம் இலக்க 2019 மே 26 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டது. |